www.tamilarangam.net

# கற்பகம்

KATPHAKAM

Nr. 1. 01-08-1994 இதழ் 1



தமிழ் - டெனிஸ் தோழமை ஒன்றியம்
Tamilsk - Dansk Venskabsforening

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# KATPHAKAM

**udgiver:**
**TAMILSK-DANSK VENSKABSFORENING**

**Redaktion:**
**Troels Johansen (Ansv.)**

**Redaktionhjælp:**
**Metty Jeyaratnam**
**M. S. Kandasamy**
**David George**
**T. Kugan**
**N. Mahendran**
**M. Shan**
**T. Selvakumar**

**forsidetegning af**
**Uthayan**

**Sats og Lay- out**
**Navalan Pathipphakam**

# கற்பகம்

வெளியிடுபவர்கள்:
தமிழ் – டெனிஸ்
தோழமை ஒன்றியம்

பத்திரிகைப் பொறுப்பாளர்:
ட்ரோல்ஸ் ஜோகன்சன்

உதவியாளர்கள்:
மெற்றி ஜெயரெட்ணம்
எம். எஸ். கந்தசாமி
டேவிட் ஜோர்ஜ்
என். மகேந்திரன்
ரி. குகன்
எம். சண்
து. செல்வக்குமார்

அட்டைப்படம்
உதயன்

கணனித்தொகுப்பு – வடிவமைப்பு
நாவலன் பதிப்பகம்

## Inhold
## உள்ளடக்கம்

**ENIGHED-GENSIDIG RESPEKT....**
ஒற்றுமையே பலம்

**Vedtægter....**
யாப்பு

**Møde med Indenrigsministeren**
உள்நாட்டமைச்சருடனான கூட்டம்
Redgørelse....
கேள்வியும்.....

**Sri Lanka...**

**Bestyrelse....**

கண்காட்சி.....

அடைக்கலக்குருவி

**Kontaktfamile....**

சந்திரிக்காவும்...

இந்து கலாச்சார...

**Kulturmøde, Festival 1994...**

பொறாமையின்.....

இலங்கைக்கு விஜயம்...

**DanTam..**

தரணி எங்கும்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ENIGHED - GENSIDIG RESPEKT - SAMMENHOLD - STYRKE

Med udgivelsen af dette første nummer af KATPAKAM tager arbejdet med og blandt tamilske flygtninge i Herning-området en ny form. Jeg ved ikke, om det er til fordel for nogen.

Det nye blad markerer nemlig, at der ikke længere er èn dansk-tamilsk forening - men to. Forud for oprettelsen af den nye forening - "Tamilsk-Dansk Venskabsforening" er gået et årelangt dårligt foreningsarbejde, som vi danskere, der arbejder i foreningen, ikke har brudt os om. Mistillid og uenighed mellem herboende tamiler har medført, at medlemstallet er dalet; dermed bliver foreningens styrke mindsket i forhold til ministerier, offentlige myndigheder, organisationer, m.fl., hvor Dansk-Tamilsk Venskabsforening i mange år har repræsenteret tamilske flygtninge ikke alene i Herning-området, men i hele landet. Foreningen nød stor tillid og respekt. Disse opgaver vil vi naturligvis søge at fortsætte i den nye forening - til gavn for alle tamiler.

Danmark er ikke et særligt venligt land i forhold til fremmede; vanskeligheder på arbejdsmarkedet, arbejdsløshed og de økonomiske vilkår for mange danskere kalder nemt den lille racisme frem i dagligdagen. Derfor er det vigtigt, at der er danskere, som vil samarbejde med f.eks. tamiler i kommunerne. Men det er også vigtigt, at de tamilske flygtninge er opmærksomme på, at de er repræsentanter eller måske næsten ambassadører for en fremmed befolkningsgruppe. Derfor vil flygtningenes adfærd og hele dagligliv spille en afgørende rolle for, hvordan den danske lokalbefolkning optræder og opfatter flygtningene.

I vedtægterne for vores tamilforening skrev vi i sin tid fuldstændigt klart, at foreningen er
upolitisk i parti- og interessemæssig sammenhæng. Vi har aldrig villet fremture med politiske eller "enøjede" synspunkter; foreningens blad, SANGAMAM, skulle være en ekstra informationskilde ud over medierne i almindelighed.. Bl.a. derfor opnåede vi med SANGAMAM, at mange biblioteker landet over abonnerede på bladet.

Nu har vi to foreninger i vores område. Jeg håber, at tamilerne i de to foreninger vil optræde ordentligt og afholde sig fra at bekrige hinanden. Jeg håber også, at den megen "snakken bag hinandens ryg", den ind imellem megen sladder og rygtesmederi må høre fortiden til.
Snarere end uenighed er der brug for enighed; snarere end sladder bør man tage den gensidige respekt alvorligt; hellere sammenhold end splittelse - det giver nemlig styrke - og det har vi brug for.
Hvis man ikke i de to foreninger finder den gode tone frem, vil der kun blive en stor taber i det lange løb - nemlig de tamilske flygtninge. Og det er vel ikke det, der er meningen?

Troels Johansen.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒற்றுமையே பலம்

கற்பகம் என்ற இந்த முதல் சஞ்சிகையை வெளியிடுவதனால் Herning இன் சுற்றுப் புறங்களில் வாழும் தமிழ் அகதிகள் இணைந்து செயல்படுவதில் புதிய வடிவம் ஒன்று தோன்றுகிறது. இது சிலருக்கு நன்மையாக அமையுமா என்பது எனக்குத் தெரியாது.

இப் புதிய சஞ்சிகையானது டெனிஸ்- தமிழ் தோழமை ஒன்றியம் என்ற ஒரு ஒன்றியம் தொடர்ந்தும் இல்லை என்பதனையும் குறிக்கின்றது. தமிழ்- டெனிஸ் தோழமை ஒன்றியம் என்பதனை அமைப்பதற்கு முன்பு, ஒரு வருடமாக, ஒன்றியத்தின் செயற்பாடுகள் குன்றியும், தமிழ் மக்கள் மத்தியில் பெருமளவில் கருத்து வேறுபாடுகள் தோன்றியதனால், அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது இதன் விளைவாக, அமைச்சுகளிடமும் பொது அதிகார சபைகளிடமும், வேறு ஒன்றியங்களிடம் இருந்த மதிப்பினை டெனிஸ்- தமிழ் தோழமை ஒன்றியம் இழந்தது. கடந்த காலங்களில் டெனிஸ்- தமிழ் தோழமை ஒன்றியமானது Herning சுற்றுப்புறத்தில் வாழும் தமிழர்களின் பிரச்சனைக்கு மட்டும் குரல் கொடுக்காமல், டென்மார்க்கில் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழர்களின் தேவைகளுக்கும் வேண்டிய நேரங்களில் உதவி வந்தது. ஒன்றியமானது மற்றவர்களின் நம்பிக்கையையும் மரியாதையையும் பெற்று இருக்க வேண்டியது முக்கியமாகும். இந்த முக்கியத்துவத்தை உள்ளடக்கியே புதிய அமைப்பானது தொடர்ந்து செயற்படுவது மட்டுமல்லாமல் , தமிழர்களின் தேவைகளை முன்பு போல் கவனத்திற் கொள்ளும்.

டென்மார்க்கானது வெளிநாட்டவர்களுக்கு மிகவும் சாதகமான நாடு என்று கூறமுடியாது. வேலையில்லாப் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை என்பவற்றுள் சிறிதளவு இனவாதத்தை தினசரி காணக்கூடியதாகவுள்ளது.

இதனால் டெனிஸ் மக்களுடன் இணைந்து செயற்படுவது முக்கியமாகும். உதாரணமாக உள்ளூராட்சிசபைகளுடன் இணைந்து செயற்படவும், தங்களை மற்றைய இனமக்கள் மத்தியில் பிரதிநிதிப்படுத்தவும் முக்கியமானதாகும். ஆதலால் அகதிகள் நடத்தையானது டெனிஸ் மக்கள் முன்னிலையில் தினசரி அகதிகளைப்பற்றி பலவிதமாக விளங்கிக் கொள்ள வைக்கின்றது.

எங்கள் தமிழ் ஒன்றியத்தின் யாப்பானது அரசியற்கட்சி சார்பற்றது என்பதனை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இக்கூற்றைப் பாதுகாத்துக் கொண்டு ஒரு பக்க சார்பாக செயற்பட முடியாது. சங்கமமானது, ஒன்றியத்தின் வெளியீடாகும். இது ஒரு மேலதிக செய்தி வெளியீடாகும். இதற்கு மேலாக சங்கமமானது, பல வாசகர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. இப்போது எங்கள் எல்லைப் பிரதேசத்தில் இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றது. இவ்விரண்டு ஒன்றியங்களும் தேவையற்ற விதத்தில் வதந்திகளைப் பரப்பி, வீண் விவாதங்களை வளர்த்து வருவதாக எனக்குத் தோன்றுகின்றது.

வெகுவிரைவில் இப்படியான செயற்பாடுகளைக் கைவிட்டு ஒற்றுமையை வளர்க்க வேண்டும். வீண் பேச்சுக்கள், வதந்திகள், நிறுத்தப்பட்டு முக்கியமாக மரியாதையும் கூட்டொருமையையும் வளர்க்கவேண்டும். இதுவே பாலமாகும். இதனை நாம் உபயோகிக்கலாம்.

இவ்விரு ஒன்றியங்களும் நல்ல ஒரு முடிவினை அடையாவிட்டால் இப்பிரிவினையானது தமிழ் அகதிகளை பெருமளவில் பிற்காலத்தில் பாதிக்கும்

இக் கருத்திற்கு ஒரு எண்ணம் உண்டா?

Troels Johansen



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# VEDTÆGTER FOR "TAMILSK-DANSK VENSKABSFORENING"

§ 1. NAVN, HJEMSTED, FORMÅL.

a) Foreningens navn er "Tamilsk-Dansk Venskabsforening".

b) Dens hjemsted er Herning kommune og nabokommunerne.

c) Foreningens formål er at skabe venskab mellem tamiler og danskere og gennem foreningens virke arbejde for de to gruppers kendskab til og fortåelse for hinanden.

d) Foreningen er uafhængig af partipolitik.

§ 2. MEDLEMSSKAB.

a) Ønske om indmelding skal ske skriftligt til bestyrelsen.

b) Medlemsskab opnås, når godkendelse af ansøgeren er givet, og indbetaling af kontingent er modtaget.

c) Hvis et medlem ikke accepterer foreningens vedtægter eller formål, kan bestyrelsen ekskludere vedkommende. Eksklusionen kan indankes for førstkommende generalforsamling.

d) Bestyrelsen har ret til undtagelsesvis at optage medlemmer bosat andre steder end i Herning kommune og nabokommuner.

§ 3. GENERALFORSAMLING.

a) Ordinær generalforsamling afholdes én gang om året i januar kvartal.

b) Generalforsamling indkaldes med mindst tre ugers varsel med angivelse af dagsorden i foreningens medlemsblad eller i en meddelelse, som udsendes til alle medlemmer.

§ 4. DAGSORDEN FOR GENERALFORSAMLING.

a) Valg af dirigent, som ikke må være medlem af bestyrelsen.

b) Valg af referent og 2 stemmetællere.

c) Formandens beretning.

d) Kassereren forelægger revideret driftregnskab og status til godkendelse.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



d) Kassereren forelægger revideret driftregnskab og status til godkendelse.

e) Kontingent og opkrævningsmåde fastsættes.

f) Valg af bestyrelsesmedlemmer og 2 suppleanter. Der kræves mundtligt eller skriftligt tilsagn afgivet af de foreslåede personligt.

g) Stemmeret og valgbarhed kræver mindst 3 måneders medlemsskab af foreningen, og stemmeret kan kun udøves ved personligt fremmøde.
Der holdes hemmelig afstemning, hvis blot et medlem ønsker dette.

§ 5. EKSTRAORDINÆR GENERALFORSAMLING.

Ekstraordinær generalforsamling kan indkaldes, når bestyrelsen finder det nødvendigt, og skal indkaldes, når mindst 1/3 af medlemmerne skriftligt forlanger dette. Den ekstraordinære generalforsamling skal afholdes senest en måned efter begæringens modtagelse.

§ 6. BESTYRELSEN.

a) Bestyrelsen består af 9 medlemmer, som alle vælges for 2 år ad gangen. Det ene år er 4 af disse på valg, det efterfølgende år de resterende 5.
Begge nationaliteter skal være repræsenteret.

b) For at sikre fornyelse i bestyrelsen gælder valg til formand, næstformand, sekretær og kasserer kun for en periode af 2 år. Genvalg af personer til disse fire poster for en ny periode kan kun ske ved, at generalforsamlingen peger på dem til de samme funktioner i en ny periode.

c) Bestyrelsen konstituerer sig med formand, næstformand, sekretær og kasserer og fordeler desuden arbejdsopgaverne blandt alle sine medlemmer.

d) Bestyrelsen træffer selv beslutning om sine aktiviteter.

e) Formanden eller mindst 3 bestyrelsesmedlemmer kan beslutte, hvornår der skal afholdes bestyrelsesmøde. Dagsordenen skal sendes til alle bestyrelsesmedlemmer, før mødet afholdes.

f) Bestyrelsen kan kun træffe beslutninger, når mindst 5 medlemmer - inklusive formanden eller næstformanden - er til stede.
Ved afsteminger kræves almindeligt stemmeflertal. I tilfælde af stemmelighed er formandens - eller i hans fravær næstformandens - stemme afgørende.

g) Hastesager kan afgøres af formanden og mindst 2 bestyrelsesmedlemmer, hvis bestyrelsen ikke kan indkaldes omgående.

h) Referater af bestyrelsesmøder skal sendes til suppleanterne.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



§ 7. ADMINISTRATION OG REGNSKAB

a) Kassereren fører foreningens regnskab. Regnskabsåret følger kalenderåret.

b) **Årsregnskabet revideres af en revisor, som udpeges af bestyrelsen eventuelt efter indstilling fra generalforsamlingen.**

c) **Kassereren fremlægger en regnskabsoversigt for bestyrelsen hvert kvartal.**

d) **Ved økonomiske disopositioner tegnes foreningen af kassereren sammen med formanden eller næstformanden.**

**§ 8. VEDTÆGTSÆNDRINGER.**

a) **Hvis medlemmerne ønsker ændringer af vedtægterne, skal forslaget være bestyrelsen i hænde inden 1. januar.**

b) **Ved ændring af foreningens vedtægter kræves tilslutning fra mindst 2/3 af de til generalforsamlingen fremmødte medlemmer.**

**§ 9. FORENINGENS OPLØSNING.**

a) **Foreningen kan kun opløses af en generalforsamling med deltagelse af mindst 2/3 af samtlige medlemmer. Desuden skal 2/3 af de fremmødte stemme for opløsningen.**

b) **Er 2/3 af medlemmerne ikke til stede, skal der senest 30 dage efter afholdes en ekstraordinær generalforsamling. Her kan opløsningen vedtages med 2/3 af de tilstedeværendes stemmer.**

**§ 10. EKSTERNT SAMARBEJDE.**

a) **Foreningen indgår et i samarbejde med Sammenslutningen af Tamilske-Danske foreninger.**

b) **Foreningen kan desuden samarbejde med andre organisationer, der arbejder for tilsvarende formål i Danmark og i andre lande.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் - டெனிஸ் தோழமை ஒன்றியம்
# Tamilsk - Dansk Venskabsforening

**§ 1. :- பெயர், பிரதேசம், கொள்கைகள்**
**(1) பெயர் "தமிழ் - டெனிஸ் தோழமை ஒன்றியம்"** ஆகும்.

**(2)** கேர்ணிங்கும், அதற்கு அருகாமையில் உள்ள நகராட்சிப் பிரதேசமும், இச்சங்கத்தின் பிரதானமான இடங்களாகும்.
**(3)** டெனிஸ் - தமிழ் மக்களுக்கிடையே ஒரு சிறந்த நட்புறவை வளர்ப்பது இச்சங்கத்தின் கொள்கையாகும்.

**(4)** இச்சங்கமானது சுதந்திரமானது, அரசியல் கட்சி சார்பற்றது.

**§ 2. :- அங்கத்துவம்.**
**(1)** அங்கத்தவராகச் சேரவிரும்பும் ஒவ்வொருவரும் தனித்தனியே நிர்வாகச் சபைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**(2)** ஒரு விண்ணப்பதாரரின், அங்கத்துவ விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பு, அவ்விண்ணப்பதாரர் அங்கத்துவப்பணம் செலுத்திய பின்னரே அவர் சங்கத்தின் அங்கத்துவ உரிமையை பெற்றுக் கொள்கின்றார்.

**(3)** ஒரு அங்கத்தவர் சங்கத்தின் யாப்புக்கு முரணாக நடப்பாராயின் அல்லது சங்கத்தின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிப்பாராயின் அவரைச் சங்கத்தில் இருந்து வெளியேற்றும் உரிமை நிர்வாக சபைக்கு உண்டு. அதேவேளை அந்த அங்கத்தவர் விரும்பினால் எதிர் வரும் பொதுச்சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

**(4)** சங்கத்தின் பிரதேச எல்லைக்கு அப்பால் வசிக்கும் ஒருவர் அங்கத்துவத்துக்கு விண்ணப்பித்தால், அதனைப் பரிசீலித்து முடிவு செய்யும் உரிமை நிர்வாக சபைக்கு உண்டு.

**§ 3:- பொதுக்கூட்டம்**
**(1)** சாதாரண பொதுக்கூட்டம் வருடத்திற்கு மூன்று மாதத்திற்குள் நடைபெறும்.

**(2)** பொதுக்கூட்ட அறிவித்தலானது பொதுக்கூட்ட திகதிக்கு மூன்று வாரத் திற்கு முன்னர் அங்கத்தவர்களுக்கு நிகழ்ச்சி நிரலுடன் அனுப்பப்படல் வேண்டும். இவ்வறிவித்தலானது அங்கத்துவ சஞ்சிகை மூலமோ அல்லது கடித மூலமோ அறிவிக்கப்படவேண்டும்.

**§ 4 :- பொதுக்கூட்ட நிகழ்ச்சிநிரல்**
**(1)** பொதுக்கூட்டம் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்ட தற்காலிக தலைவரால் நடாத்தப்படும், அத்தலைவர் நிர்வாகசபை உறுப்பினராக இருக்கமாட்டார்.

**(2)** அறிக்கை தயாரிப்பவர் ஒருவரும், வாக்குகளை எண்ணுவதற்கு இருவரும் தெரிவு செய்யப்படுவர்.

**(3)** தலைவரின் வருடாந்த அறிக்கை

www.tamilarangam.net



**(4)** பொதுக்கூட்டத்திற்கு முன்பு அங்கீகரிக்கப்பட்ட அல்லது அதிகாரம் பெற்ற கணக்காளரால்பரிசீலிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்ட கணக்கறிக்கையை காசாளர் சமர்ப்பிக்க் வேண்டும்

**(5)** பொதுக்கூட்டத்தில் அங்கத்துவப்பணம் தீர்மானிக்கப்படும்.

**(6)** நிர்வாகசபை உறுப்பினர்கள், பதில் நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு. எழுத்து மூலம் அல்லது பொதுக் கூட்டத்தில் நேரடியாக பிரேரிக்கப்பட வேண்டும்.

**(7)** இக்கூட்டத்தில் ஒரு அங்கத்தவர் இரகசிய வாக்களிப்புக் கோரும் பட்சத்தில், அந்த வாக்களிப்பு நடைபெறும். வாக்களிப்பில் பங்குபற்றுபவர்கள் பொதுக்கூட்டத்திற்கு சமூகமளிக்க வேண்டும். அத்துடன் மூன்று மாதங்களுக்கு முன்னர் அங்கத்தவர்களாகியவர்கள் மட்டுமே வாக்களிக்க முடியும்.

**§ 5 :- விசேட பொதுக்கூட்டம்.**
இக்கூட்டமானது நிர்வாகசபை தீர்மானித்தால் அல்லது மூன்றில் ஒரு பகுதி அங்கத்தவர்கள் எழுத்து மூலம் நிர்வாகசபைக்கு விண்ணப்பித்தாலும் நடைபெறும். இந்த விண்ணப்பமானது நிர்வாகசபைக்குக் கிடைத்த ஒரு மாதத்தின் பின்பு விசேட பொதுக்கூட்டம் நடத்தப்படல் வேண்டும்.

**§ 6 :- நிர்வாகசபை**
**(1)** நிர்வாகசபை ஒன்பது அங்கத்தவர்களை கொண்டிக்கும், இவர்களின் பதவிக்காலம் இரண்டு வருடங்களாகும். இவர்களில் நால்வர் முதல் வருடத்திலும், மற்றைய ஐவர் தொர்ந்து வரும் அடுத்த வருடத்திலும் தெரிவு செய்யப்படுவர். நிர்வாகசபையில் இரு இனத்தவரும் இடம் பெறுவர்.

**(2)** நிர்வாகசபையில், தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், ஆகிய பதவிகள் இடம் பெறும் இவர்களின் பதவிக் காலம் ஒரு வருடமாகும். இப் பதவிகளை வகிப்பவர்கள் அதே பதவியில் தொடர வேண்டுமாயின், பொதுச்சபையின் அங்கீகாரம் பெறவேண்டும்.

**(3)** நிர்வாகசபையில், தலைவர், உப்தலைவர், செயளாளர், காசாளர், தவிர்ந்த மற்றைய நிர்வாகசபை உறுப்பினர்களும், வேலைகளைப் பகிர்ந்து கொள்வர்.

**(4)** நிர்வாகசபையானது நிர்வாகசபை நடைமுறைகளைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும்.

**(5)** நிர்வாகசபைக் கூட்டமானது தலைவரின் தீர்மானப்படி அல்லது மூன்று நிர்வாகசபை அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நடைபெறும். அத்துடன் நிகழ்ச்சி நிரலானது இக்கூட்டத்திற்கு முன்னதாக அனைத்து நிர்வாகசபை அங்கத்தவர்களுக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

**(6)** இக்கூட்டம் நடைபெறுவதற்கு தலைவர் அல்லது உபதலைவர் உட்பட நிர்வாகசபையில் ஐந்து பேர் கலந்து கொண்டால் மட்டுமே நடைபெறும். இக்கூட்டத்தில் வாக்கெடுப்பு நிலை வருகின்றபொழுது வாக்குகள் சமனாக வரும் பட்சத்தில் நிர்வாகக்கூட்டத்தை தலைமை தாங்குபவர் தனது மேலதிக வாக்கை உபயோகிக்க உரிமையுடையவராவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(7) நிர்வாகசபைக் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில், அவசரத் தேவை ஏற்படின் தலைவரும், இரண்டு நிர்வாகசபை அங்கத்தவர்களும் கலந்தாலோசித்து முடிவு எடுக்கலாம்.

(8) பதில் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் நிர்வாகசபை அறிக்கை அனுபப்பட வேண்டும்.

**7.:- வரவு - செலவும், நிர்வாகமும்..**

(1) தனாதிகாரியினால் சங்கத்தின் வரவு செலவு அறிக்கை தயாரிக்கப்படும். வருடாந்தக் கணக்கு அறிக்கையானது தைமாதம் முதலாம் திகதியிலிருந்து மார்கழி மாதம் முப்பத்தோராம் திகதிகுட்பட்ட காலமாக இருத்தல் வேண்டும்.

(2) வருடாந்தக் கணக்கறிக்கையானது, உள்நாட்டு அலுவர்கள் அமைச்சுச் சட்ட விதிகளுக்கு அமைய அரசாங்கத்தால் பதிவு செய்யப் பெற்ற அல்லது உத்தரவு பெற்ற கணக்குப் பரிசோதகரால் பரிசோதிக்கப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு கால் வருடமும் தனாதிகாரி தனது கணக்கு அறிக்கையை நிர்வாக சபைக் கூட்டத்தில் சமர்பிக்க வேண்டும்.

(4) பணக் கொடுக்கல் வாங்கல்களில் தனாதிகாரியுடன் தலைவர் அல்லது உப்தலைவர் கையொப்பமிடல் வேண்டும்.

**8:- யாப்பு மாற்றம்.**

(1) அங்கத்தவர்கள் எவராவது யாப்பில் மாற்றங்கள் கொண்டு விரும்பினால், தை மாதம்1ம் திகதிக்கு முன்னர் நிர்வாகசபைக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

(2) யாப்பு மாற்றம் நிறைவேற்றப்படுவதற்கு, பொதுக்கூட்டத்தில் பங்குபற்றும் அங்கத்தவர்களின் மூன்றிலிரண்டு பங்கினரின் அங்கிகாரம் பெறவேண்டும்.

**9:- சங்கத்தைக் கலைத்தல்**

1) சங்கத்தைக் கலைப்பதற்கு முன்னறிவித்லுடன் விசேடப் பொதுக்கூட்டம் கூட்டப்படல் வேண்டும். இந்த விசேட பொதுக்கூட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர் பங்குபற்றுதல் வேண்டும். பங்குபற்றும் தொகையில் மூன்றிலிரண்டு பங்கு சங்கத்தைக் கலைப்பதற்கு சாதகமாக அமையவேண்டும்.

(2) அவ்வாறு மூன்றிலிரண்டு பங்கு சமூகமளிக்காவிடின் முப்பது நாட்களுக்குள் பின்பு கூட்டம் கூட்டப்படவேண்டும். கூட்டத்தில் பங்குபற்றியோரின் மூன்றிலிரண்டு வாக்குகள் கிடைக்கும் பட்சத்தில் சங்கத்தைக் கலைக்க முடியும்.

**10:- மற்றைய ஒன்றியங்களுடன் சேர்ந்து செயற்படுதல்**

(1) இச்சங்கமானது டெனிஸ் - தமிழ் தோழமை ஒன்றியங்களின் ஒருங்கிணைப்புடன் ஒருங்கிணைந்து செயற்படும்.

(2) இதற்கு மேலாக சம நோக்கமுடைய ஏனைய ஒன்றியங்களுடனும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சேர்ந்து செயற்படமுடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



NYT FRA SAMMENSLUTNINGEN AF TAMILSK-DANSKE FORENINGER:

# MØDE MED INDENRIGSMINISTEREN

Torsdag d. 2. maj 1994 afholdtes et møde i Indenrigsministeriet mellem repræsentanter for ministeriet og STDF. Fra ministeriet deltog indenrigsminister Birte Weiss og juristen Lone Christensen, som tillige er medlem af Flygtningenævnet. For STDF mødte næstformanden S.Sivarajah, medlem af forretningsudvalget T.Selvakumar og undertegnede. Sammen med STDF-gruppen deltog desuden advokaten Christel Falk-Rønne.

Den direkte årsag til, at vi ønskede dette møde, var tvangshjemsendelsen af en tamilsk asylansøger d. 29. januar i år og pressens omtale af, at Direktoratet for Udlændinge forberedte lignende hjemsendelse af yderligere over et hundrede tamilske asylsøgere.

Mødet blev benyttet til at redegøre for tamilske flygtninges personlige syn på og oplevelser af de aktuelle, uberegnelige forhold i Sri Lanka, som gør tilbagevenden umulig. Desuden kunne vi berette om asylsøgeres og advokaters generelle erfaringer fra konfrontationer med Direktoratet for Udlændinge og Flygtningenævnet.

Samtidig hermed benyttede vi lejligheden til at advare imod, at den danske regering indgår en aftale med regeringen i Sri Lanka om hjemsendelse af tamiler, som endnu ikke har fået asyl her i landet. En sådan aftale, som vi endnu ikke kender konsekvenserne af, er som bekendt allerede kommet i stand mellem den schweiziske og den srilankanske regering.

Under mødet, som varede en time, kom det klart frem, at ministeren og vi selvfølgelig ikke var enige på alle områder. Ministeren var dog meget lydhør over for vore synspunkter, ligesom vi var det over for hendes, men hun kunne naturligvis ikke ved en sådan lejlighed afgive politiske løfter.

Det vigtigste resultat af dette første møde med den politisk ansvarlige for flygtningeområdet ligger derfor på et andet plan: en forhåbentlig større gensidig forståelse og tillid, som måske vil vise sig at være yderst gavnlig ved fremtidige direkte kontakter.

Forudsætningen for, at alle tamiler i Danmark kan få gavn af sådanne kontakter er, at der blandt tamiler er enighed om og forståelse for STDF's formål, og at man ikke gennem STDF i alt for høj grad udstiller sine politiske uoverensstemmelser.

Thorbjørn Lorentzen.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தமிழ்-டெனிஸ் சங்கங்களின் கூட்டிணைப்பிலிருந்து தகவல்**

# உள்நாட்டமைச்சருடனான கூட்டம்

அமைச்சின் பிரதிநிதிகளும், தமிழ் டெனிஸ் சங்கங்களின் கூட்டிணைப்பு பிரிதிநிதிளும் மே மாதம் 2ம் திகதி வியாளனன்று அமைச்சு அலுவலகத்தில் கூடினர். அமைச்சு சார்பில் பியற்ற வைஸ், சட்ட நிபுனர் லூன கிறிஸ்ரன்சன் (அகதிகள் சபை பிரதிநிதி) ஆகியோரும், தமிழ்-டெனிஸ் சங்க கூட்டிணைப்பு உபதலைவர் **எஸ். சிவராசா,** பிரத்தியேகசபை உறுப்பினர்கள் **து. செல்வக்குமார், தோபியோன் லோறன்சன்** மற்றும் வழக்கறிஞர் **கிறிஸ்ரல் பல்க் றொன்ன** ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டம் கூட்டப்பட்டதற்கான அடிப்படைக் காரணம், இந்த வருடம் தை 29ம் திகதி நாடு திருப்பியனுப்பப்பட்ட தமிழ் அகதி விண்ணப்பதாரரை தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் அகதி விண்ணப்பதாரரை நாடு திருப்பியனுப்ப வெளிநாட்டவர் திணைக்களம் தயார் செய்து வருவதாக வெளிவந்த பத்திகை செய்தி குறித்து கலந்துரையாட மேற்படி கூட்டம் கூட்டப்பட்டது.

மேற்படி கூட்டம் தமிழ் அகதிகளின் தனிப்பட்ட கருத்துக்களும், தற்போதை அலுவல்கள், இலங்கைக்கு திருப்பியனுப்ப முடியாத அங்குள்ள சூழ்நிலைகள் பற்றி ஆராயப்பட்டது. அத்துடன் அகதி விணப்பதாரரினதும், வழக்கறிஞர்களினதும் வெளிநாட்டவர் திணைக்களத்துடனும், அகதிகள் சபையுடனுமான பொதுவான அலுவல்கள் தெரிவிக்க முடிந்தது.

அதேவேளையில் டெனிஸ் அரசாங்கம் இலங்கை அரசுடனான இதுவரை புகலிடம் பெறாத தமிழர்களை திருப்பி அனுப்பும் உடன்படிக்கை தொடர்பாக நாம் முழுமையாக எதிர்ப்புகளைத் தெரிவித்திருந்தோம். இலங்கை அரசுக்கும் சுவிஸ் அரசுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை எமக்கு தெரிந்த அளவு டென்மார்க் அரசும் இலங்கையரசும் செய்து கொண்டதாக தெரியவில்லை.

ஒரு மணி நேரமாக நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அமைச்சருக்கும் எமக்கும் இடையில் எல்லா விடயங்களிலும் உடன்பாடு ஏற்படவில்லை. அமைச்சர் எங்கள் கருத்துக்களை மிகவும் செவிமடுத்தார். அதுபோல் நாங்களும் அவரின் கருத்துக்களுக்கு செவிமடுத்தோம். ஆனால் அமைச்சரினால் மேற்படி கூட்டத்தில் எதுவித முடிவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த முதற் சந்திப்பு வேறொரு விதத்தில் அகதிகள் மட்டத்திலான அரசியல் வட்டத்தில் முக்கிய பலனைத் தந்துள்ளது. அதாவது எதிர் காலத்தில் நேரடியாக தொடர்பு கொள்ளக் கூடியளவுக்கு புரிந்துணர்வையும், நம்பிக்கையையும் பெரிய அளவில் ஏற்படுத்தியுள்ளது.

டென்மார்க்கில் வாழும் அனைத்து தமிழர்களும் தமிழ் - டெனிஸ் கூட்டிணைப்புச் சபையின் குறிக்கோள்களை புரிந்து, ஏற்றுக் கொண்டு மேற்படி தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அதே நேரத்தில் தனிநபர் ஒருவர் தன்னுடைய சொந்தக் கருத்துக்களை தமிழ்- டெனிஸ் கூட்டிணைப்பு சபை மூலம் வெளிப்படுத்தக் கூடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## REDEGØRELSE FOR ÆNDRINGER I DET TAMILSK-DANSKE FORENINGSARBEJDE I HERNINGOMRÅDET.

Ved slutningen af året 1992 havde Dansk-Tamilsk Venskabsforening (DTV) i Herning ca. 150 medlemmer. For at imødekomme alle holdninger blandt de tamilske medlemmer valgtes på generalforsamlingen i marts 1993 til bestyrelsen to medlemmer fra en fraktion, som ikke følte sig tilgodeset. Dette medførte imidlertid vanskeligheder for gennemførelsen af det planlagte arbejde.

Da foreningens blad Sangamam endelig i august 1993 atter udkom, vakte nogle artikler en sådan modvilje blandt medlemmerne, at ca. 120 forlod foreningen.

Ved generalforsamlingen i marts 1994 med kun 35 deltagere ønskede 2 bestyrelsesmedlemmer ikke at genopstille. Herefter indvalgtes yderligere 2 personer fra den førnævnte fraktion. På grund af det nu uacceptabelt lave medlemstal og de store holdningsmæssige forskelle udmeldte 5 af bestyrelsens medlemmer sig i de følgende dage.

Den nu stærkt reducerede bestyrelse indkaldte da til en ekstraordinær generalforsamling, hvor en fuldtallig bestyrelse valgtes og indgribende vedtægtsændringer blev godkendt. Man vil herefter bl.a. optage medlemmer fra alle dele af landet for at få medlemmer nok til at kunne søge offentlig støtte. D.v.s. at foreningen tilsyneladende kun henvender sig til en ganske snæver kreds. Bladet Sangamam udgives stadig af denne forening.

Samtidig hermed dannede nogle af de udmeldte medlemmer en ny forening under navnet Tamilsk-Dansk Venskabsforening (TDV). Medlemmerne af denne forenings bestyrelse er stort set de samme personer, som tidligere var ansvarlige for DTV (fortegnelse over bestyrelsen vedlægges). Vedtægterne for den nye forening er næsten identiske med DTV's oprindelige (vedtægterne medfølger som bilag). Den mest iøjnefaldende ændring er, at bestyrelsen forbeholder sig retten til at godkende medlemmer, som søger optagelse (til sammenligning: man optager jo ikke kaninavlere i en brevdueforening!).

Også den nystartede Tamilsk-Dansk Venskabsforening er tilsluttet Sammenslutningen af Tamilsk-Danske Foreninger, en paraplyorganisation, som i 1991 blev til netop på initiativ af DTV i dennes oprindelige udgave. Derudover har TDV nøjagtig samme holdninger og arbejdsområder, som DTV tidligere havde. Dette vil bl.a. komme til udtryk i foreningens blad, som får navnet KATPAHAM. Foreningen vil ligeledes fortsat arbejde uafhængigt af partipolitik.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கோர்ணிங் பிராந்தியத்தில் தமிழ்-டெனிஸ் சங்க வேலைகளில்மாற்றம்பற்றிய அறிக்கை

1992ம் ஆண்டு இறுதியில் டெனிஸ்-தமிழ் தோழமை ஒன்றியம் கோர்ணிங்கில் கிட்டத்தட்ட 150 உறுப்பினர்களை கொண்டிருந்தது. பல்வேறு கருத்துப்பாடுகளைக் கொண்ட தமிழ் உறுப்பினர்கள் கலந்து கொண்ட மார்ச்ச 1993ம் பொதுக்கூட்டத்தில் சங்கத்துடன் உடன்பாடில்லாத ஒரு பிரிவினர் தமது சார்பில் இருவரை நிர்வாக சபைக்குத் தெரிவு செதய்தனர். இதன் விளைவு திட்டம்மிடப்பட்ட வேலைகளை செய்வதற்கு பெரும் தடங்கள் ஏற்படுத்தியது.

சங்கத்தின் பத்திரிக்கையான சங்கமம் ஆகஸ்ட் 1993ல் முதலில் வெளி வந்தபோது. அதில் உள்ள சில கட்டுரைகள் உறுப்பினர்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 120 உறுப்பினர்கள் சங்கத்தைவிட்டடு வெளியேறினர்.

மார்ச 1994ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 35 பேர் மட்டுமே பங்குபற்றியதில் இரு நிர்வாகசபை உறுப்பினர் நீண்டும் நிர்வாகசபையில் இருக்க விரும்பவில்லை. இதன்பின்னர் எதிர்தரப்பு பரிவினர் தமது இருவரைத் தெரிவு செய்தனர். ஏற்றுக் கொள்ள முடியாத அங்கத்தினர் பற்றாக்குறை, பெரும் கொள்கை வேறுபாடுகள் காரணமாக தொடர்ந்து 5 போர் நிர்வாகசபையைவிட்டு வெளியேறினர்.

தற்போது குறிப்பட்ட உறுதியான நிர்வாகம் விசேட பொதுக்கூட்டத்தை கூட்டி நிர்வாகசபையைப் பூரணப்படுத்தியதுடன் யாப்பில் மாற்றம் கொண்டு வரப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது அரசு நிதி உதவி கோருவதற்கும், அங்கத்தவர் தொகையை கூட்டுவதற்கும் நாட்டில் சகல பகுதிகளிலும் இருந்து திரட்டப்படும். அதாவது சங்கம் குறிப்பிட்ட பிராந்தியத்தையே மையப்படுத்தி செயற்படும். சங்கமம் தொடர்ந்தும் அந்த சங்கத்தினால் வெளி வருகின்றது.

அந்தச் சங்கத்தில் இருந்து வெளியேறிய உறுப்பினர்கள் தமிழ்-டெனிஸ் தோழமை ஒன்றியம் என்ற புதிய சங்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இச்சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள் பெரும்பாலானோர் முன்னைய சங்க உறுப்பினர்களாவார் புதிய சங்கத்தின் யாப்பு கிட்டத்தட்ட பழைய யாப்பின் வடிவமே. ஆயினும் குறிப்பிடத்தக்க மாற்றம் என்னவெனின், உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்ளும் முடிவும், உரிமையும் நிர்வாக சபையிடமே உள்ளது.

இந்த புதிய தமிழ்-டெனிஸ் தோழமை ஒன்றியம் ஆனது தமிழ் - டெனிஸ் கூட்டிணைப்புடன் (குடை அமைப்பு) இணைக்கப்பட்டுள்ளது. இக் குடை அமைப்பு 1991ம் ஆண்டு டெனிஸ் - தமிழ் தோழமை ஒன்றியத்தினால் உருவாக்கப்பட்டது. மேலும் தமிழ் - டெனிஸ் தோழமை ஒன்றியம் முனுனைய சங்கத்தைப் போன்று அதே கொள்கைகளையும், செயற்பாடுகளையும் கொண்டிருக்கும். இப்புதிய சங்கத்தின் பத்திரிக்கையாக "கற்பகம்" வெளியிடப்படும். சங்கம் தொடர்ந்தும் அரசியல் சார்பற்று இயங்கி வரும்.

**எம் எஸ் கந்தசாமி**
தலைவர்,
தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றியம்

**Thorbjøn Lorentzen**
முன்னைய தலைவர்,
டெனிஸ்-தமிழ் தோழமை ஒன்றியம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Bashy Quraishy
Freelance journalist
Minoritets konsulent

# Familiesammenføring - lov og praksis

FN har erklæret 1994 for „Internationalt Familie år" - I den anledning har FNs general sekretær Boutros Boutros - Ghali udtalt : „ FN - som er en stor familie af alle verdens nationer - anerkender familien som ethvert samfunds grundliggende enhed." Det er en smuk tanke, som de etniske mindretal i Danmark varmt kan tilslutte sig.
I vores eget Danmark har alle ret til at stifte familie uden statslig indblanding. Folk kan gifte sig som de vil, med hvem de vil og hvor de vil. Denne ret har vi, de etniske mindretal i Danmark også haft indtil nu. Men siden Juni 92 har de danske myndigheder langsomt, men bevidst kopplet denne ret til en lang række betingelser. Fx skal man nu have haft ophold i Danmark i mindst 5 år, man skal være 18 år gammel, man skal kunne dokumentere, at man er i stand til at forsørge sin ægtefælle og evt. børn, dvs have en minimumsløn på 2 x bistandshjælp, dvs ca. 9 - 10.000 kr efter skat. Direktoratet for udlændinge henvender sig til socialkontorene for at få oplysninger om folks forsørgelses-evne. Der findes ikke nogen klare retningslinier og vejledning til kommunerne om beregning af forsørgelsesgrundlaget fra Indenrigs eller Social-ministeriet. Socialrådgivere og sagsbehandlere i kommunerne træffer de afgørende vurderinger fra sag til sag og mange mennesker bliver derfor nægtet deres rettigheder, på et forkert grundlag. De uklare retningslinier og den manglende vejledning til kommunerne, som Direktoretet for udlændinge selv har erkendt, er altså årsag tilen urimelig forskelbehandling ved ansøgninger om familiesammenføring. Det har skabt stor uro og utryghed blandt de etniske mindretal. Vi har eksempler på at direktoratet for udlændige i forbindelse med afslag, direkte skriver: **„Kommunen har oplyst at deres ægtefælle ikke er i stand til at forsørge dem, og det antages ikke at være umuligt eller direkte uheldigt at deres ægtefælle bosætter sig med dem i deres hjemland."** Kort sagt - Skrub dog hjem.Indenrigsminister Birthe Weiss har overfor Politiken sagt at, familiesammenføringerne er faldet med næsten 50 % efter stramningerne af loven. - og alligevel diskuterer man i folketinget, at stramme reglerne ydeligere.
Indvandrerådets medlemmer får dagligt mange henvendelser fra deres bagland, ang. uretfærdig behandling fra direktoratet for udlændinges side, og i kommunerne. Det samme kan vi mærke i IND-sam og hos Dokumentations og Rådgivnings Centeret. Blandt orgsanisationerne for de etniske minoriteter har vi besluttet at starte en underskriftssamling , som protest imod de nye restriktive regler og for at gøre myndighederne opmærksom på problemets urimelig omfang. Det er uforståeligt for os, at man i et demokratisk samfund som Danmark, i lovgivningen sikrer alle mennesker ret til frit at stifte familie, men samtidig i praksis gør alt for at forhindrer etniske mindretal i at nyde denne grundlæggende ret.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தரணி எங்கும் தமிழ் ஓசை
# உலகத் தமிழ் தொலைக் காட்சி

தரணி எங்கும் தமிழ் ஓசை என்ற எழுச்சிப் பெயர் கொண்ட உலகத் தமிழ்த் தொலைக் காட்சி நிகழ்ச்சி பிரித்தானியாவிலிருந்து ஒளிபரப்புகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

அன்றாடம் இரு மணிச்சேவையாகவும் வெள்ளி-சனியில் மூன்று மணிச்சேவையாகவும் ஐரோப்பா முழுவதும் செய்மதி மூலம் ஒளி பரப்பப்படும் நிகழ்ச்சியாக ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கவிருக்கும் இந்தச் சேவை விரைவில் அமெரிக்கா, கனடா, மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்க நாடுகளுக்கும் விஸ்தரிக்கப் படும்.

இந்தத் தமிழ் ஒளிபரப்புக்களை லண்டனைத் தளமாகக் கொண்ட தமிழ் அலைகள் என்ற நிறுவனம் நடாத்தவுள்ளது இந்த நிறுவனத்தின் நிதி இயக்குனராக லண்டன் பொருளாதாரவியல் கல்லூரியின் இறுதியாண்டு பட்டதாரி மாணவரும் பிரித்தானிய தமிழ் தகவல் ஏடுகள் நூலின் ஆசிரியருமான திரு. ஏ. கே. சி.திருலிங்கநாதன் விளங்குகிறார். நிகழ்ச்சித் தயாரிப்பு இயக்குனராக மனநோய் மருத்துவரும், எழுத்தாளரும், நூலாசிரியரும்,முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன ஒலிபரப்பாளரும், முன்னாள் திரைப்பட நடிகருமான டாக்டர் க. இந்திரகுமார் விளங்குகிறார். தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் உரிமைகளை தமிழ் அலைகள் நிறுவனத்தினர் செய்மதி ஒளிபரப்புக் கம்பனியான ஜி. எஸ். டி. வியிடமிருந்து சமீபத்தில் பெற்றுக் கொண்டனர். இதற்கான ஒப்பந்தம் லண்டனில் கைச்சாத்திடப் பட்டது.

இந்தியத் தொலைக்காட்சி நிலையமான தூரதர்ஷனின் தமிழ் நிகழ்ச்சிகளை லண்டனுக்குத் தருவித்து ஒளிபரப்புவதற்கான பிரத்தியேக உரிமைகளை தமிழ் அலைகள் நிறுவனம் பெற்றுள்ளது. எங்களுக்கு நிகழ்ச்சிகளுக்குப் பஞ்சமில்லை. நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு தங்கச் சுரங்கமே எங்களிடம் உள்ளது என்று டாக்டர் இந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது ஒரு தொலைக் காட்சி ஒளிபரப்பை புதிதாக ஆரம்பிக்கும் காலகட்டத்தில் முகம் கொடுக்க வேண்டிய முக்கிமான பிரச்சனைகளில் ஒன்று தரமான நிகழ்ச்சிகளுக்குத் தட்டுப்பாடு. அந்த வகையில் தூரதர்சஷன் நிகழ்ச்சிகள் எங்களுக்கு ஆரம்ப கட்டங்களில் கிடைப்பது ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். காலம் செல்லச் செல்ல நாங்களே எங்களது நிகழ்ச்சிகளைத் தயாரிப்போம். அது மட்டுமல்ல, இலங்கை, சிங்கப்பூர், மலேஷியா, நாடுகளின் தரமான தமிழ் நிகழ்ச்சிகளை வரவழைத்தும் ஒளிபரப்புவோம்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று கனவு கண்டான் பாரதி. உலகு தழுவிய ரீதியில் பரந்து வாழும் தமிழர்களின் இதய வேட்கையும் அது தான். இந்த வேட்கையைப் பிரதிபலிக்கும் வகையிலே தரணி எங்கும் தமிழ் ஓசை என்ற பெயரை எமது நிகழ்ச்சிக்குச் சூட்டினோம் என்றார் டாக்டர் இந்திரகுமார்.

வெள்ளி- சனியில் தமிழ்த் திரைப் படங்கள் ஒளிபரப்பாகும். வெள்ளியன்று பழைய படமும் சனியன்று புதிய படமும் ஒளிபரப்பாகும் . மேலும் சினிமா நடிகர் பங்கு பற்றும் டி. வி. நாடகத் தொடர், ஒலியும் ஒளியும் (படப் பாடல்கள்), மலரும் நினைவு கள் (சினிமா முக்கியஸ்தர்கள் பேட்டி), தூரதர்ஷன் டி. வி. செய்திகள், இசை நடன நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும். யூற்றல் சற செய்மதி வாங்கிகள் மூலம் இந்நிகழ்ச்சிகளை பார்க்கலாம். அஸ்ற்ரா செய்மதி வாங்கிகள் வைத்திருப்போர் குறைந்த செலவில் மேலதிக கருவிகளை

இணைத்து இந் நிகழ்ச்சிகளை பார்க்கலாம்.

மேலதிக விபரங்கள் விரைவில் வெளியாகும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விளையாட்டு

# இந்த வருடம் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் டென்- ராம் விளையாட்டுக் கழகம் பெற்ற வெற்றிகளின் விபரங்கள்

உள்ளரங்கு உதை பந்தாட்டம் ( Indendørs fodball)

| | | |
|---|---|---|
| Tarm tournament | 1994 | 1st place. |
| Midellefart toutnament | 1994 | 1st place. |

## உதை பந்தாட்டம் ( Fodbald)

Young stars cup 1994 2 nd place.
இப் போட்டியில் 7 பேர் மட்டும் ஒரு பகுதியில் கலந்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| Horsens cup | 1994 | 4th place. |
| Jaffna cup | 1994 | 3 rd place. |

## கரப்பந்தாட்டம் ( Volly bold)

| | | |
|---|---|---|
| Bjerringbro | 1st | place. |
| Vamdrup | 1st | place |
| Horsens | 1st | place |
| Tarm | 2nd | place |

## கிறிக்கெட் ( Cricket)
## Jaffna cup 1994

இதில் எமது கழகத்தை சேர்ந்த மகேந்திரன் சதம் போட்டு (100 ஓட்டம்) சாதனை படைத்துள்ளார். இது இருபது இடத்தவணை பந்தெறிவுகளைக் (ஓவர் கொண்டதாகும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கோர்னிங்கில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி .

கடந்த 07 . 05 . 94 ம் திகதியன்று கோர்னிங் நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களால் புத்தகக் கண்காட்சியொன்று நடாத்தப்பட்டது . இப்புத்தகக் கண்காட்சியில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 100 புத்தகங்களும் , இதர எம்மால் சேகரிக்கமுடிந்த தமிழ்பத்திரிகைகள் , சஞ்சிகைகள் , நூல்கள் , விளக்க அட்டைகள் , உட்பட சுமார் 500 க்கும் மேற்பட்ட புத்தகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இக்கண்காட்சி யாருடைய முயற்சி ?

ஒவ்வெரு மாணவரும் தனித்தனியே மூன்று புத்தகங்களைத் தயாரித்திருந்தனர் . அவர்களுடைய முயற்சியை உற்சாகப்படுத்தவே இது நடாத்தப்பட்டது. இது ஆசிரியராலும் மாணவராலும் இணைந்து நடாத்தப்பட்ட ஒரு கண்காட்சியாகும் . கூலிஸ்ரொப் பாடசாலை இதை நடாத்துவதற்கான உதவிகளைச் செய்தது.

இக்கண்காட்சி ஏன் நடாத்தப் பட்டது ?

ஒவ்வோர் கல்வியாண்டிலும் அவ்வாண்டில் அடையப்பட வேண்டிய இலக்கு திட்டமிடப் பட்டுவிடும் . இவ் இலக்கை அடைவதற்கு வசதியாக ஓர் வேலைத் திட்டத்தைத் தயாரித்துக்கொள்கிறோம் . அதனடிப்படையில் நடாத்தப்பட்டதே இக்கண்காட்சி . பாடசாலை முடிந்து சோர்வுதரும் நேரத்தில் தமிழைப் படிக்கவரும் மாணவரது மனதை உற்சாகப் படுத்தி , இலக்கைநோக்கி அவர்களை களைப்பில்லாமல் நகர்த்திச் செல்லும் ஓர் நடைமுறை யாகும் .

பெற்றோர் ஒத்துழைப்பு .

தமது பிள்ளைகள் தாய் மொழியை அறிந்திருப்பது அவசியம் என்பதைப் பெற்றோர் உணர்ந்துள்ளனர். அந்த அடிப்படையில் அதிகமாக எல்லாப் பெற்றோரும் உற்சாகமாகக் கலந்து கொண்டதை நேரடியாகவே காணமுடிந்தது. மேலும் இது முதல்தடவையாக சிறு அளவில் பிள்ளைகள் செய்ததை பெற்றோருக்குக் காட்டுமுகமாகவே நடாத்தப்பட்டது.

கண்காட்சியால் பெற்ற நன்மையென்ன ?

மாணவர் ஒவ்வொருவரும் தாமும் ஓர் புத்தகத்தை உருவாக்கினோம் என்ற உற்சாகத்தைப் பெற்றிருந்தனர் . எல்லா மாணவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கி உற்சாகப் படுத்தப்பட்டது. தாய்மொழி சிந்தனை மொழியாக இருந்த நிலை மாற்றமடைந்து இரண்டாவது மொழியாக மாறிவரும் நிலையில் இத்தகைய முயற்சிகளில் நிட்சயம் நன்மையுண்டு .

தகவல் — தமிழ் மொழிப் பாடப் போதனைப் பிரிவு கோர்னிங்.

---

## கலாச்சார விழா 1994
## புரட்டாதி 30 வெள்ளிக்கிழமையும், ஐப்பசி 1ம் திகதி சனிக்கிழமையும்.

**மேலதிக விபரங்கள் பின்பு அனுப்பி வைக்கப்படும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அடைக்கலங்குருவி

முல்லையூரான்

இது ஓர் அடைக்கலங்குருவியின் கதைமட்டுமல்ல
ஈழத்தில் போரின்நடுவே தன்வீட்டோடு தன் குழந்தையையும் எரியக்
கொடுத்த ஒரு ஈழத்தாயின் கதையும்தான்.

குச்செடுத்து
என்னலகால் தூக்கமுடிந்த தடியெடுத்து
பட்ட இலை பொறுக்கி பஞ்சணை தானமைத்து
பக்குவமாய் குடியிருந்தோம்.
அதோ உயரத்தெரியுதந்த அழகிய விருட்சமொன்றில்.
சுற்றிவந்து ஓடி இரைதேடி
கண்டதெல்லாம் பற்றிவந்து
பழமென்றும், விதையென்றும்
பார்த்துப்பொறுக்கிவந்து
இறகு அரும்பாத என்குழந்தை
செவ்வலகு தான்திறந்து உண்டுமகிழ்கையிலே
என்னிறகின் நோவறந்து
என்னிளங்குஞ்சோடு மாறிமாறி இறகுகோதி
இங்குநான் குடியிருந்தேன்.

வட்ட நிலா திரண்டுவருநாளொன்றில்
என்துணையும் கோதுமை பொறுக்கிவர வயலுக்குப் போனவர்தான்
திரும்பிவரவில்லை.
போரடிப்போர் சேர்த்தடித்து
என்துணையின் குருதியையும்
கோதுமையில் சேர்த்துண்டார்.
என்துணையின் பிரிவுதனை,
எனதிந்த சின்னக்குருவியின்
அப்பிள்விழிகளில் மறந்துவிட்டேன்.

பின்பொருநாள்
சூரியன் மேலெழுந்து
எனதூர் வெய்யிலில் குளிக்கும்வரை காத்திருந்து
என்னழகுக்குஞ்சுக்கு
இரைதேடி ஓடிவரப்போயிருந்தேன்.

அன்றெனது இறகுழைந்து
குரல்வளையில் நீர்வற்றி
இரைதேடிக்கண்ணுழைந்து
கண்ணிட்ட இடமெல்லாம்
வெறும்நிலமாய் நான்கண்டு
என் இளங்குஞ்சின் நினைவில் நெஞ்சிடித்து கூடுதிரும்புகையில்
என்தேசம் வீழ்ந்திற்று. என்கூட்டோடும் குஞ்சோடும்
என்விருட்சம் வீழ்ந்திற்று.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாருங்கள்
இந்தமனிதரை
நான்கூடுகட்டி வாழ்ந்தவொருவிருட்சம்
அடுத்தவர்க்கிலக்காகி
அதை அழித்து சீர்செய்து
புதிய பயிர் வளர்த்து
அதைச்சுற்றி அழகுநிறை கல்பதித்துவிட விருப்பம்கொண்டனர்.
பாவிகளே!
எது அழகு? என்குருந்தின் பிணத்திலா ரோஜா நடுகின்றீர் !!

என் குருந்தெங்கே?
இறகு அரும்பாத என் அழகெங்கே ?
மரம்வெட்டக் கூடுடைந்து என் குலைந்துமணிக்குருந்தும்
சேர்ந்து நசிந்திற்றா ?
வட்டமிட்டேன் சுற்றிவரப்பூமியையும்.
தேடிவரப்புறப்பட்டேன் போர்நடக்கும் பூமியெங்கும்.

அழகான நதியொன்று பாயும்கரைகளிலும்,
அதனுச்சிக் கொம்பினிலும்,
தன்னந்தனியனாய் மூச்செறியும் மரத்திலையும்,
குளிரில் எரியும் இந்த இரத்தநிறக் காட்டிலையும்,
திருகி வளைந்த இப்பெருமரக்கூட்டங்களிலும்,
மனிதரைப்புதைக்கும் பொதுமன்றச் சாலையிலும்,
என்குருந்தின் குரல்தேடி
பறந்து களைத்தேன் நான்.

கற்களின்மீதுநின்று
கால்நீளத்தேடுகையில்
சின்ன அலையொன்றில்
என்கண்ணீர் கலந்திற்று.
கரைதோறும் கடலலைகள்
வானமெங்கும் என்சிறகடிப்பு
கரைதோறும் கால்நுழைந்து....
கடலோரப்புழுதிகளோ...
என்விழிபிழிந்த நீர்சுமந்து.
எப்படித்தேடுவேன் எங்கென்று தேடுவேன் ?
மனிதர்களே !
பூட்டிய இந்த சாளரத்தருகில்
என்மழலை தட்டுமொலி கேட்கிறதா ?
இந்த இரவின் தெருவிளக்கில்
எத்தனைநாள் நானிருக்க

கூடுடைத்து தீயிடும் இரவல்வீடுகளில் நானமர்ந்து
எனதிறகை இழப்பதுவா !
கூடுகளில் அடைபடுமளவுக்கு – இந்த மனிதரின் கண்களில்
அழகுப்பறவையல்லவே நான் .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டாம். நானும் இந்தப் பூமியில் தான் கூடுகட்ட வேண்டும்.
சத்தியமாய் சொல்லுகிறேன்
இவர்கள் என் குஞ்சைக்கொன்றிட்டார்.

ஓ! கவிதைகளே
வீரிய இறகுகள் தாரீர் !
இந்த பிரபஞ்சம் சூழப்பறந்து
இந்தக் கொடுமைகள் சொல்லவேண்டும்.
எமது கூடுகளை அழிப்பவர் கண்களில் கொத்திட எனக்கு
கூரிய அலகுகள் வேண்டும்.
எனக்கென ஓர் புதியகூடு கட்டவும்
கன்னமிடுவோர் கரங்களை கீறவும்
வேலென எனக்கோர் கோரநகங்கள் வேண்டும்.

இந்த இராக்குளிரில்
தன்சோடியிழந்த இந்த அடைக்கலங்குருவி
எங்கே படுக்கும் ?
எங்கே கூடு
நானும் வருகிறேன்

கண்ணீருடன்
உன்னைப்போலொருவன்
முல்லையூரான்
1992.11.28

# மீட்டிடத்தாய்மண்ணை

காலங்கள் வருமென்று கனவுகாண் வாய்வீரர்கள்
வீரங்கள் பலபேசி வீணர்களாய்
சாலங்கள் பலசெய்து தமைத்தாமே ஏமாற்றி
தாய்நாட்டு மண்ணை தவிக்கவிட்டு
மேல்நாட்டு மண்ணில் வேர்விட்டு விழுதுவிட்டு
மாலைவேளை கூடிக்குலாவிக் கூத்தாடி
தொல்கால வேதங்கள் பலபேதங்கள் கற்றும்
மூலங்கள் அறியமுற்படா போலிகாள்
சங்கமமைத்து பங்கங்கள், பாவங்கள் செய்வதைவிட்டு
சங்கமாகுங்கள் தாய்மண்ணின் மைந்தர்காள்.

காலங்கள் கனியுதென்று கவலை வேண்டாம் எமக்கு
இனியும் வேண்டாம் இந்த வீராப்பு
ஞாலங்கள் போற்றிட மீட்டிடத் தாய்மண்ணை
புறப்படுங்கள் புரட்சி செய்வோம்
புரட்சிப் பாதையில் தொழிலாளி விவசாயி புத்திஜீவி
எல்லோரும் ஒன்றாகிப் போரிடுவோம்
இறப்பது காண்பீர்! மண்ணில் தனியுடமை
புறக்குது மாங்கோர் பொதுவுடமை

-புரட்சிதாசன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Tamilsk og dansk kontaktfamilie søges til:

## Bofælleskabet!

Det er det navn der i daglig tale bliver brugt om lejligheden LyngensKvarter 13, Gullestrup. I lejligheden bor 5 tamilske uledsagede flygtninge børn, dvs. drenge der er kommet til Danmark på egen hånd. Disse drenges forældre opholder sig på Sri Lanka hvis de er i live.

Dansk Flygtningehjælp og Herning Kommune har en stor opgave omkring disse drenge som har behov for råd og vejledning, omsorg og opdragelse.

Der skal ydes en stor indsats fra alles side for at få hverdagen til at glide og fungere. Der er ingen mor eller far til at gøre alle de praktiske ting som indkøb madlavning og tøjvask, rengøring osv. Ansvaret for sengetider , skolegang, økonomi og alle de andre livsfunktioner kan være svære at bære på drengenes egne skuldre på et tidspunkt i deres liv hvor de står midt i mellem at være barn og på vej til at blive voksen.

I Bofælleskabet er der to ansatte. En tosproget omsorgsmedarbjeder og en dansk socialpædagog. - Dorte og Selva. Der er vores opgave som ansatte, at hjælpe drengene med, at få hverdagen til at fungere, og hjælpe med at strukturere tingene så hverdagene ligner hinanden.

Vi har også den opgave, at gøre drengene modne til et liv på egen hånd i Danmark. Vi snakker med dem om deres muligheder i fremtiden, om uddannelse, arbejde, bolig osv.osv. En af vores opgaver er også at formidle kultur, både tamilsk og dansk. Kulturformidling er mange ting For virkelig at lære noget om en kultur kræver det deltagelse i kulturen. At være passiv tilskuer er ikke nok, det kræver aktiv deltagelse, "learning by doing", for virkelig at få en oplevelse af en kultur.

At blive ven med en dansk familie, med en tamilsk familie, og at deltage i nogle daglige begivenheder med disse familer ville være en måde at lære noget om egen og ny kultur!

Vi kunne således ønske os en tamilsk og en dansk famile som ville være vores kontakter til kulturen og den tryghed - det fællesskab der findes i familien.

Vi forestiller os, at vi kunne ses en gang i måneden, muligvis flere hvis det er omkring højtider og ferier osv. Drengene ville komme i jeres hjem, og de kunne invitere jer engang imellem. Hvis du og din famile har tid og lyst til at være noget for disse drenge, vil vi blive glade for jeres henvendelse. Du og din familie er også velkomne til at ringe til os hvis der skulle være spørgsmål omkring det at være kontaktfamilie.

**97 21 22 48 man-tor 11.30-13.00.**

---

**கற்பகம் இதழிற்கு தங்கள் ஆக்கங்களை எழுத விரும்புபவர்கள் எதிர்வரும் 15.09.1994ற்குப் பிந்தாமல் எழுதி அனுப்பவும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரிகாவும், இனப்பிரச்சனையும்

சிறுபான்மையினரின் பிரச்சனைக்குத் தீர்வு ஒன்று காணும் நிலையில் சந்திரிகா பண்டாரநாயக்காகுமாரணதுங்காவின் அரசியல் சிறப்பியல்பு தங்கியுள்ளது. இதில் எதுவித சந்தேகமுமில்லை. இரு சிறுபான்மை இனத்தவர்களாகிய தமிழர் முஸ்லீம்களின் அபிலாசைகளை புரிந்துள்ளாரென்று இதுவரை தமிழ் முஸ்லீம் புத்திஜீவிகள் பாராட்டுவதையிட்டு சந்தோஷமடைகிறார்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்காதான் சிங்களத் தலைவர்களுள் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் புத்திக் கூர்மையுள்ளவராகவும் உறுதிப்பாடு உள்ளவராகவும் இருப்பதாகக் கொழும்பில் வெளிவரும் பத்திரிகைகள் கூறுகின்றன.

இவர் உண்மையில் அரசியல் ஸ்தானத்திலிருந்து வடகிழக்குப் பிரச்சனையை தீர்த்து வைப்பாரா? திருமதி சந்திரிகா தமிழர்கள், முஸ்லீம்களின் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு பேச்சு வார்த்தை மூலம இனபபிரச்சனைக்கத் தீர்வு காண்பதே இவரின் முக்கியம். இபபிரடகனத்திலிருந்து சிறுபான்மையினரின் இனப்பிரச்சசனையை சரியாகக் கையாளுவாரென்று அரசியல் ரீதியாக உணரக் கூடியதாக இருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் பத்திரிகைச் செய்திகளின்படி சந்திரிகா தமிழர்களின் வாக்குக்களைப் பெறுவதற்கு ஒரு புதுத்தந்திரத்தைக் கையாளுகிறார். காலம் சென்ற பிரேமதாஸ தமிழ் மக்களிடையே கட்ட விழ்த்து விடப்பட்ட யுத்தத்தை நிறுத்துவ தாக இனிய வார்த்தைகள் பேசி மறுபக்கத்தில் இராணுவத்தை தூண்டிவிட்டு யுத்தத்தைத் தொடர விட்டார். இது போன்று சந்திரிகாவும் செய்வாரென்று கோடிட்டுக் காட்டுகிறார்கள். டி.பி.விஜய துங்கா ஒரு நேர்மையான சிங்களத் தேசியவாசி. இவர் ஒரு பிடிவாதக்காரர். தன்னுடைய கொள்கையை எப்பொழுதும் விட்டுக் கொடுக்கமாட்டார். இவரை ஒரு அர் த்தமில்லாத அரசியல் வாதி என விடுத லைப் புலிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதே வேளையில் பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சுனைத் தீர்வு பற்றிய நிலைப் பாட்டை தெளிவாகப் பகிரங்கப் படுத்தியுள்ளது. தெற்கில் நடந்த மாகாணசபைத் தேர்தலின் போது பொதுஜன முன்னணி அதன் நிலைப்பாட்டை சமர்ப்பித்து சிங்கள மக்களின் அங்கிகாரத்தையும் பெற்றுள்ளது. பொது ஜன முன்னணித் தலைவி சந்திரிகாவின் இந்த தைரியம் பாரட்டத்தக்கது. இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண அவர் இராணுவத்தை நாடமாட்டார் என்பது அவரது செயல்பாடுகளிலிருந்து புலப்படுகிறது சிங்கள மக்கள் அப்போக்கை ஏற்கின்றனர்.

மேல்மாகாண சபையில் பிரதம மந்திரியாகவிருக்கும் இவர் அதிகாரப் பரவலாக்கம் பற்றி அரசாங்கத்துடன் அடிக்கடி மோதிக் கொண்டும் அரசாங்கத்துடன் பல கலந்துரையாடலில் பங்கு பற்றியும் வந்துள்ளார். இதன் காரணமாக எஸ். எல். எம். பிக்குள்ளும் நிறைய செல்வாக்கைப் பெற்றுள்ளார். மேற்கூறிய அரசியல் பரவலாக்கம் சிறு பான்மையினரின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒரு வடிகாலாக அமையுமெனக் கூறுகிறார்.

13ம் திருத்தப் பிரேரணையை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதாகக் கூறுகிறார் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக விஜயகுமாரணதுங்கா யாழ்ப்பாணம் சென்று பேசினார். சந்திரிகா இந்தியா வரையும் போனார். பிரச்சனைத் தீர்வில் சந்திரிகாவுக்கு உள்ள அக்கறையை தமிழ் மக்கள் தெளிவாக உணர முடியும். எனவே தமிழர்களும் முஸ்லீமகளும் நன்கு உணர்ந்து, சிந்தித்து செயல்பட வேண்டும். சில தமிழ் அரசியல் வாதிகள், சந்திரிகாதான் வரப் போகும் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் உள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதம மந்திரியாக தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்பு உள்ளதாக நம்புகிறார்கள். எனவே எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


# இந்து கலாச்சார ஆராய்ச்சி தகவல் நிலையத்தினரால்

## இந்துப் பெரும் மக்களுக்கு தங்களின் நிலைப்பாடு பற்றிய தகவல்

கோயில் இல்லா இடத்தில் குடியிருக்க வேணடாம் என்பர் பெரியோர்.

ஆராய்ச்சி தகவல் நிலையத்தினர் ஆலயத்தை நிரந்தர இடத்தில் அமைப்பதற்கென நிலம் ஒன்றை வாங்கியுள்ளனர் அந்த நிலத்தில் கட்டிடத்தை குறிப்பிட்ட கால எல்லைக்குள் கட்டி முடிக்க வேண்டுமென கேர்ணிங் மாநகர சபை உத்தர விட்டுள்ளது. இக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு பெருந்தொகை யான பணம் தேவைப் படுகிறது. ஆகவே நாம் இந்து சமய மெய்யடியார்களிடம் பணத்தைத் திரட்டி கட்டிடத்தை பூர்த்தி செய்ய தீர்மானித்துள்ளோம். இதற்காக டென்மார்க்கில் வசிக்கும் சகல இந்து தமிழ் மக்களிடம் சென்று பணத்தை சேக ரிக்க வெகு விரைவில் நாடிவரவுள்ளோம்.

மற்றும் ஆலயத்திற்கு வழிபட வருபவர்கள் ஆலயத்திலுள்ள நிர்வாகிகளிடம் பணத்தைச் லெுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்




ஆலயம் அமைவதற்கென வாங்கப்பட்ட நிலத்தின் வரை படம.

அத்துடன் நாம் வருகின்ற நவராத்திரி பூசையை 10 நாட்கள் ஆலயத்தில் சிறப்பா கவும் மேலும் இந்து சமய சிறார்களுக்காக கலை விழாவாக இதற்குள் இடைப் பட்ட ஒர் திகதியில் நடாத்தவுள்ளோம். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இதற்கு இந்து சமயம் சம்மந்தமான இயல் இசை நாடகங்களில் பங்குபெற விரும் புவோர் நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் சிறுவர்களுக்கு ஏடு தொடக்க விரும்புவோர் 1994-10-12ம் திகதிக்கு முன் நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

1994-10-14ம் திகதியன்று விஜயதசமி பூசை ஆலயத்தில் நடைபெறும்.

இங்கனம்
இந்து கலாச்சார ஆராய்ச்சி தகவல் நிலையம்.
தபால் பெட்டி எண் 317
7400 கேர்ணிங்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# KULTURMØDE

Dato: **Søndag d. 4/9 kl.12 - 21.**

Sted: Dansk Flygtningehjælp's hus/ HK - huset, Vestergade 41 -43, Herning.
Ude og inde.

**GRATIS ADGANG**

Arrangør: Dansk Flygtningehjælp i samarbejde med Røde Kors, Amnesty, A.I.F, Asylcenter Lind , SID, HK's Kunstudvalg, Sprogskolen, Solsikken, Tamilsk Venskabsforening.

**FORLØBIGT PROGRAM**
(Udførligt program vil foreligge medio august)

**AVARA**, kurdisk og mellemøstlig musik, kurdisk/dansk 6 - mandsorkester.
**TEEN SING**, stort **dansk** ungdomskor - og orkester.
**GLOBUS**, serveringsteater.
**Tamilsk** dans og musik.
Fernisering på kunsudtilling, maleri og skulptur, **kurdisk** og **vietnamesisk** kunstner.
**Sydamerikansk** foklore-dansgruppe.
**Bosnisk** orkester.
Masser af børneaktiviteter: teater, gøgl, sminke - og tegnetelt.
Internationle madboder og restaurant.
En musikalsk overraskelse og meget mere.

Per Ryevad
leder af Dansk flygtningehjælps aktivitetshus

# FESTIVAL 1994

**fredag - lørdag, den 30.sep. og 1. okt.**

Både danskere og tamiler har hvert år haft stor glæde af de festivaler Tamilsk-Dansk Venskabsforeninger har afholdt i Herning.
Der har været mange gæster og deltagere - ikke blot fra Herning og lokalområdet, men også langvejs fra. Det har virkelig været en stor begivenhed og en dejlig mulighed for at træffe venner og landsmænd.Derfor vil Tamilsk -Dansk Venskabsforening også arrangere festival i år. De nærmere deltajer er ikke klar endnu - de vil blive meddelt senere. Men sæt **X** i kalenderen allerede nu. På gensyn **den 30 sep. og 01.okt** til festival i Herning.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொறாமையின்! பொக்கிஷங்கள்!!

-வேலணையூர் பொன்னண்ணா-

தன்முதுகில் சீழ் வடியும்!
தானு மிதை தான் அறியார்!
மற்றவர் முதுகு மறு......
மணக்கு தென இகழ்வார்!

பட்டங்கள் பல பெற்றிருப்பார்- மக்களுக்கு
பயன் படுத்த மறுத்திருப்பார்!
நாயின் வால் தேன் போலே......
நாட்டிடையே வாழ்ந்திருப்பார்!

மேடை தனில் ஏறார்- மக்கள்
மேன்மைக்கு வழி கூறார்... பிறர்
மேடை தனில் நின்று... மக்கள்
மேன்மைக்கு வழி சொன்னால்......
மேதையா இவன் என்று...
கேலி தான் செய்வார்!

பதவிக்கு ஆசை கொள்வார்- அதற்குரிய
பக்குவத்தை(த்) தான் செய்யார்!
மற்றவர் வளர்ச்சி கண்டு......
மனம் பொறுக்க மாட்டார்!
வார்த்தையிலே விஷம் கலப்பார்......
வசை பாடி(த்) தான் மகிழ்வார்!

மண்ணுக்குள் வளங்கள் பல- சில
மனிதர்கள் இதை அறியார்!
மனிதருக்குள் சக்தி பல- சில
மனிதர் இதை ஏற்கார்!
எல்லாம் தெரிந்தவர் போல் - மற்றவை
ஏழனம் தான் செய்வார்!

மொத்தமாய் இத்தனையும்......
சொந்தமாய் கொண்டவரே!
பொறாமையின் பொக்கிஷங்கள்!
புரிந்திடுங்கள் புரிந்து நடந்திடுங்கள்!!

மீண்டும் உள்ளூர் வானொலியில் தமிழ் ஒலிபரப்பு பின்வரும் திகதிகளில் நடைபெறும்
12.09.94, 26.09.94, 10.10.94, 24.10.94, 07.11.94, 21.11.94, 05.12.94, 19.12.94
(ஒன்றுவிட்ட திங்கட்கிழமை மாலை 19.00 –19.30)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டவர் குழுக்களின் முடிவு என்ன?

**அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இரண்டு வெளிநாட்டவர் குழுக்கள், ஐரோப்பாவில் அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்துள்ள தமிழர் களை இலங்கைக்குத் திருப்பியனுப்பக்கூடிய வாய்ப்புள்ளதாக தெரிவிக் கின்றனர்.**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், (ICRC) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உயர் ஸ்தானிகராலயமும் (UNHCR) இலங்கையில் மனித உரிமைகள் நல்ல முறையில் இருப்பதால் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட தமிழர்களை இலங் கைக்குத் திருப்பியனுப்பலாம்" எனக் கருதுவதாக டென்மார்க் வெளிநாட்டின ருக்கான இலகாவால் வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

மேலே குறிப்பிட்ட முடிவை நாம் உற்று நோக்குகையில் டென்மார்க்கில் அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்துவிட்டு மாதக்கணக்காகவும், பல காரணங்களா கவும் வருடக்கணக்காகவும், பதிலுக்கா கக் காத்திருக்கும் நூற்றுக் கணக்கான தமிழ் அகதிகளின் நிலை அர்த்தமற்ற தாகிவிடுகின்றது.

வெளிநாட்டவர்களுக்கான இலாகவால் வெளியிடப்பட் அறிக்கையில் ஏன் அவர்வாறு குறிப்பிட்டுள்ளனர் என நாம் ஆராய்கின்ற பொழுது, கடந்த பங்குனி மாதம் 7ம் திகதியிலிருந்து 18ம் திகதி கிடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கைக் யையின் உண்மை நிலைகளை நேரில் கண்டறிவதற்காக, சுவீடன், நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளின் உயரதி காரிகள் குழுக்கள், இலங்கையில் இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டு வந்து கொடுத்த தகவல்களின் பேரிலேயே, அந்த அறிக்கையில் அவ் வாறு குறிப்பிட்டுள்ளனர் எனலாம். மேற்படி இக்குழுவினர் கொடுத்த அறிக் கையின் பல முடிவுகள் ஒன்றுக் கொன்று வித்தியாசமாக இருப்பதாக மனித உரிகைள் ஸ்தாபனம் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களின் பலத்த கண்டனத் துக்குள்ளாகியுள்ளது. அதாவது இவர் கள் இலங்கை பற்றி தெரிவித்த முடிவுக ளுக்கும் சுவிற்சலாந்து நாட்டின் பிரதி நிதிகள் கொடுத்த முடிவுகளுக்கும் நிறை வேறுபாடுகள் உள்ளதென்பது உணரக் கூடியதாக இருக்கின்றது.

## ஒரே இரண்டு வேறுபட்ட கருத்துக்கள்

சுவீடன், நோர்வே, டென்மார்க் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்த அதே காலப்பகுதியில் அதாவது பங்குனி மாதம் 6ம் திகதியிலிருந்து 20ம் திகதிகுட்டபட்ட காலப்பகுதியில் சுவிற்சலாந்து நாட்டுப் பிரதிநிதிகள் குழுவினரும் இலங்கைக்கு விஜயம் சென்றிருந்தனர். இவ்வெறுபட்ட குழுவினரும் இலங்கையில் ஒரே வித மான மனித உரிமைகள் ஸ்தாபனத்தின ருடனும், உயரதிகாரிகளிடுனும் ஆலோ சனை நாடத்தியுள்ளனர். ஆனால் இந்த வெவ்வேறுபட்ட குழுவினர் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு வந்த பின்னர் இலங்கை நிலமைபற்றி முற்று முழுதான வித்தியாசமான கருத்துக்க ளைத் தெரிவித்துள்ளனர்.

## டென்மார்க் குழுனரின் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

இலங்கையில் பொதுவாகவே 1989ல் இருந்து ஆனால் 1993ம் ஆண்டின் இலை யுதிர் காலப்பகுதியில் குறிப்பிட்டளவு பிரச்சனைகள் நடந்திருக்கின்றது மட்டுமல்ல 1994ல் மிகக் குறைந்தளவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள்தான் காணாமல் போயிருக்கின்றனர், அத்தோடு மிகக் குறைந்தளவினர்தான் நீண்ட கால தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிக்கின்றனர். "இது இவ்வாறு இருக்க ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தினதும் சர்வதேச் செஞ்சிலுவைச் சங்கத்தினதும் பார்வையில் இலங்கைப் பிரச்சனையில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருககின்றது. அது மட்டுமல்ல சுவிற்சலாந்து நாட்டுப் பிரதிநிதிக் குழுவினரது அறிக்கையிலும், இவ்வருட முதல் மாதத்தில் மிகக் குறைந்தளவினர் காணமல் போயிருக்கின்றனர் என்றும் இலங்கையில் மனித உரிமைகள் நிலமையானது அடிப்படையில் முனனேற்றம் இல்லை என்றும் இவர்களது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அத்துடன் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்படுவதும், சித்திரவதைகளுக்குள்ளவதும், சகஜமாக இடம் பெற்று வருகின்றது என்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

## சுவிற்சலாந்து ஒப்பந்தம்

இந்த இரண்டு வகையான குழுக்களின் அறிக்கைகளின்படி ஐரோப்பாவில் அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்துள்ளவர்களை திருப்பி அனுப்ப முடியாதென்பது தெட்டத் தெளிவாகின்றது. அதேவேளை ஐரோப்பாவில் அகதி அந்தஸ்து கோரியுள்ள தமிழர்கள் நினைப்பது போல இலங்கையில் உள்ள தமிழர்கள் அதைப் பெரிதாகக் கருதவில்லை என்றும் இந்த அறிக்கைகளில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

டென்மார்க் வெளிநாட்டவர்களுக்கான இலாகாவில் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ் அகதி அந்தஸ்து கோரியுள்ளோரை இலங்கைக்குத் திருப்ப அனுப்புவது சம்பந்தமான பந்தியில் பின் வருமாறு உள்ளது.

"இலங்கையில் உள்ள தற்போதைய நிலமையில் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்பலாம் என இலங்கை அரசசார்பற்ற ஸ்தாபனத்தினர் (NGOS) பொதுவான ஒரு ஆலோசனையைத் தெரிவித்துள்ளனர். அதேவேளை அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் விசேடமாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயமும் ஆதரவு தொவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இவ்விடயத்தைப் பொறுத்தவரை, சர்வதேச உதவி ஸ்தாபனங்களுடன், மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும் என்பதைப் பிரதிபலிப்பதாக சுவிற்சலாந்து அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் ஐரோப்பாவில் இருந்து அதிகளவில் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இவ்வருட ஆரம்பத்திலிருந்தே, தமிழ் அகதி அந்தஸ்துக் கோரியுள்ளவர்களை சுவிற்சலாந்து நாட்டினர் எவ்வாறு பராமரிக்கின்றனர், எவ்வாறு கட்டுப்பாடு விதித்துள்ளனர் என்பதை, ஏனைய ஐரோப்பிய நாட்டு வெளிநாட்டு அதிகார சபையினர் மிகவும் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர். அதற்குக் காரணம் என்னவெனில் கடந்த தைமாதம் சுவிற்சலாந்து அகதி அந்தஸ்து கோரியவர்களை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்காக இலங்கையுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் சுவிற்சலாந்து, ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயக் கண்கா ணிப்பின் கீழ், அங்கிருந்து ஏறக்குறைய 300 தமிழர்களை திருப்பி அனுப்பக் கூடியதாக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒப்பந்தம் எதுவுமின்றி நிராகரிப்பு

சுவிற்சலாந்து நாட்டினர் இலங்கையுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் போன்று டென்மார்க்கும் இலங்கையுடன் ஒரு ஒப்பந்தம் செய்வதற்குக் கடந்த சில மாதங்களாக முயற்சி செய்து வருகின்றது. ஆகவேதான் டெனிஸ் அகதிகள் சபை தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை வருடக் கணக் காகப் பரிசீலணை செய்யமல் சேர்த்து வைத்துள்ளது. ஒரு சில தரவுகளை நாம் உற்று நோக்குகின்ற பொழுது, டெனிஸ் அகதிகள் சபையானது கடந்த வருடத் தில் ஏறக்குறைய 115ம் விண்ணப்பங் களை மட்டும்தான் பரிசீலித்தது. இதில் 180 தமிழ் விண்ணப்பங்களை மட்டும் தான் பரிசீலணை செய்தது. இதிலும் பன் னிரண்டு பேருக்கு மட்டும்தான் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது மீதியுள் ளோரில் சிலருக்கு நேரடியாகவே அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டது. சிலரின் விண்ணப்பத்தை பரிசீலணை செய்து பதிலும் இல்லாமல் பிற்போடப்பட்டது.

உள்நாட்டமைச்சின் உயரதிகாரி திரு Kleas Niels அவர்கள் கடந்த மாதம் Politiken பத்திரிக்கைக்கு கொடுத்துள்ள பேட்டி யொன்றில் இலங்கையுடனான ஒப்பந்தத் தில் கைச்சாத்திட்ட பின்னர் மேற்கூறிய பிற்போடப்பட்டுள்ள விண்ணப்பங்களை உரியவர்களுக்கு திருப்பி அனுப்பப்படும் என்று கூறியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, வெளிநாட்டவர்களுக்கான இலாகாவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையானது, அகதிகள்சபையைப் பொறுத்த மட்டில் எந்தளவுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் என்று திட்டவட்டமாகக் கூற முடியாதுள்ளது.. ஆனால் அகதிகள் சபையினால் தமிழ் அகதி அந்தஸ்து கோரியோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு மேற்கூறப்பட்ட அறிக்கை ஒரு காரணமாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

சர்வதேச மன்னிப்புச்சபைக்குத் தெரிந்த வரையில் அகதிகள் சபையா னது, மேற்கூறப்பட்ட அறிக்கையைப் பெற்றுள்ளது. இதன்படி அகதிகள் சபையானது அண்மையில் வந்த தகவல் களின்படி, இலங்கையின் தற்போதைய நிலமையையும், வெளிநாட்டவர்களுக் கான இலாகாவில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையையும், டென்மார்க் வெளி நாட்டமைச்சானது குறித்து வைத் துள்ளார்கள் என்று அறியப்படுகின்றது.

fortsæt fra side 28

**Afdelingschef i Indenrigsministeriet Claes Nilas sagde i sidste måned til *Politiken*, at "proceduren må forstås sådan, at denne gruppes sager (de udsatte sager, red.) ender med, at de pågældende sendes retur efter indgåelse af en aftale med myndighederne dernede".**

**Hvilken vægt Flygtningenævnet fremover vil tillægge den nye rapport fra direktoratet, er endnu uvist. Men i mindst ét tilfælde er det første endelige afslag allerede givet – og med henvisning til bl.a. direktoratets rapport.**

**AMNESTY er bekendt med den pågældende sag, som blev afgjort, få dage efter at nævnet havde modtaget rapporten. I afgørelsen henviser Flygtningenævnet til "de i nævnet beroende seneste baggrundsoplysninger". Der er ifølge AMNESTYs kilder tale om Udenrigsministeriets seneste notat om forholdene på Sri Lanka. Og om den nye rapport fra Direktoratet for Udlændinge.** ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Turen gik til Sri Lanka

To delegationer var i Sri Lanka i marts. De rejste ud og kom hjem næsten samtidig, besøgte mange af de samme steder og mange af de samme mennesker. Og de drog indbyrdes modstridende konklusioner om mulighederne for at lade tamilske asylansøgere i Europa vende hjem.

AF STEEN NØRSKOV

Den Internationale Røde Kors Komite, ICRC, og FNs Flygtningehøjkommissariat, UNHCR, ser optimistisk på udviklingen, og den generelle menneskerettighedssituation i Sri Lanka er nu så god, at tamilske asylansøgere kan sendes tilbage, når de har fået endeligt afslag på deres ansøgning om asyl.

Sådan lyder nogle af hovedkonklusionerne i en ny rapport fra Direktoratet for Udlændinge. De vil formentlig få betydning for hundredvis af tamilske asylansøgere, som i månedsvis, i mange tilfælde i årevis, har ventet svar på deres ansøgning om asyl i Danmark.

Baggrunden for rapporten er en rejse til Sri Lanka, foretaget af embedsmænd fra Danmark, Sverige og Norge i dagene 7.-18. marts. Der var tale om en såkaldt *fact-finding mission* med det formål at "opdatere vurderingen af sikkerhedssituationen".

Flere af rapportens konklusioner står imidlertid i skarp kontrast til oplysninger fra menneskerettighedsorganisationer, bl.a. Amnesty International. Konklusionerne er også de diametralt modsatte af dem, som en delegation fra OSAR, *Swiss Organisation for Aid to Refugees* (den schweiziske pendant til Dansk Flygtningehjælp, red.), er nået frem til.

## To syn på sagen

Den schweiziske delegation var af sted på samme tidspunkt, nemlig 6.-20. marts. Af de to delegationers rejseplaner fremgår, at de også konsulterede mange af de samme menneskerettighedsorganisationer, ambassader og regeringsinstitutioner. I langt de fleste af disse tilfælde talte de endog med de samme personer. Men anlagde altså efter hjemkomsten hver sin helt forskellige vurdering af situationen i det borgerkrigshærgede Sri Lanka.

I den danske rapport står der:

"Den generelle menneskerettighedssituation er blevet væsentligt forbedret siden 1989. Efter et tilbageslag i efteråret 1993 synes situationen i 1994 igen at gå i gunstig retning med færre forsvindinger og færre længerevarende tilbageholdelser. Såvel UNHCR som ICRC ser på den baggrund optimistisk på udviklingen."

I den schweiziske rapport nævnes også de forholdsvis færre "forsvindinger" i årets første måneder, men i samme afsnit – med overskriften "Menneskerettighedssituationen er ikke grundlæggende forbedret" – skriver rapportens forfattere:

**Krigen i Sri Lanka** *mellem srilankanske regeringsstyrker og den tamilske oprørsbevægelse LTTE har raset i mere end ti år.*

"... vilkårlige fængslinger, massearrestationer, brug af vold og tortur under forhør, forsvindinger osv. hører fortsat til dagens orden."

Og videre i den schweiziske rapport:

"Dette billede af talrige menneskerettighedskrænkelser blev fremført af mange af vore samtalepartnere, deriblandt – og især – af formanden for *Human Rigths Task Force*, ICRC, UNHCR, uafhængige menneskerettighedsorganisationer og den schweiziske ambassadør."

## Schweizisk aftale

Uoverensstemmelserne mellem de to rapporter er ikke mindre iøjnefaldende i spørgsmålet om muligheden for hjemsendelse af tamilske asylansøgere fra Europa. I begge rapporter hedder det ganske vist, at tamiler, som har søgt asyl i Europa, ikke er udsat for større risiko for forfølgelse end tamiler, som hele tiden har opholdt sig i Sri Lanka. Men så hører enigheden også op.

Direktoratet for Udlændinge skriver i indledningen til rapportens afsnit om tilbagesendelse af srilankanske asylsøgere:

## Afslag uden aftale

Danmark har nøje fulgt de schweiziske forhandlinger og har gennem de seneste måneder forsøgt at indgå en lignende aftale. Baggrunden er et stort antal tamilske asylansøgninger, som i årevis har samlet støv i Flygtningenævnet.

Et par tal: Sidste år behandlede nævnet omkring 1150 sager, heraf ca. 180 tamilske, den største gruppe overhovedet. Af de ca. 180 fik kun knap en snes opholdstilladelse. Resten fik udsat deres sag – eller de fik definitivt afslag og står foran hjemsendelse.

fortsættes...27



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓவியக் கண்காட்சி

01-10-94 சனிக்கிழமை ஓவியக் கண்காட்சி ஒன்றை நடாத்த ஒன்றியம் முடிவு செய்துள்ளது. இதில் பங்குபற்ற விரும்புவர்கள் 01-09-94ற்குப் பிந்தாமல் மேல் உள்ள, ஒன்றிய விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இக்கண்காட்சியானது, கோணிங்கில் இடம்பெறும். நீங்கள் தூர இடங்களில் இருந்து வருவதனால், (அதாவது 30-09-94 வெள்ளிக்கிழமையே வரவேண்டுமாயின்) இலவசமாக, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

இந்த ஓவியக்கண்காட்சியின் நோக்கம் உங்களை டெனிஸ் ஓவியர்களுக்கு அறிமுகம் செய்வதற்கும், ஊக்குவிப்பதும் ஆகும். இந்த ஓவியக் கண்காட்சிக்கு ஆதரவு வழங்கும் வகையிலும், சிறந்த சித்திரங்களையும், ஓவியங்களையும் தெரிவு செய்து பரிசில்கள் வழங்கி ஊக்குவிப்பதற்காக Herning Bleld Skole தலைவர் திரு. Paul Lund அவர்கள் பங்குபற்றுவார்.

பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ளவும்.

தமிழ் ஓவியர்களை ஊக்குவிக்கும் வகையில் டெனிஸ் பத்திரிகையாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளார்கள் (பலர் வருவார்கள் என எதிர்பார்க்கலாம்).

எவ்வளிக்கையற்ற சித்திரங்கள், எடுத்து வரலாம் கட்டுப்பாடில்லை.

விரும்பினால் கண்காட்சி நடைபெறும் இடத்தில் இருந்தும் சித்திரங்கள், ஓவியங்கள் நீங்கள் கீறலாம்.

பின்வரும் விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. (நிர்ப்பந்திக்கப்படவில்லை).
டெனிஸ் - தமிழ் நட்பை பிரதிபலிக்கும் சின்னம் (Logo) குறைந்தது ஒன்று.

அகதியின் நிலைமை வெளிப்படுத்தும்காட்சி.
ஈழத்தின் இயற்கை பிரதிபலிக்கும் காட்சி.
தமிழ் காலச்சாரத்தை பிரதிபலிக்கும் காட்சி உங்களுக்கு விரும்பியவை (கட்டுப்பாடில்லை).

முக்கிய குறிப்பு:- பிரயாணச் செலவுகள் கொடுக்கப்படமாட்டாது. உங்கள், ஓவியங்களையும், சித்திரங்களையும், கண்காட்சியில் அன்று மாலை 18.00 பின்பு நீங்கள் விரும்பிய விலைக்கு விற்க முடியும். அவ்விடயத்தில் ஒன்றியம் தலையிடாது.

சிறந்த ஓவியங்களுக்கும், சித்திரங்களுக்கும் அன்று மாலை பரிசில்கள் வழங்கப்படும்.

நன்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் – டெனிஸ் தோழமை ஒன்றியத்தின் நிர்வாகக்குழு
# Bestyrelsen for Tamilsk - Dansk Venskabsforeningen 1994



<u>Formand:</u> M.S.Kandasamy- medstifter af Dansk-Tamilsk Venskabsforening (DTV) 1986, tidligere medlem af dennes bestyrelse.

தலைவர்: எம்.எஸ்.கந்தசாமி– டெனிஸ்–தமிழ் தோழமை ஒன்றியத்தின் ஆரம்பகால ஸ்தாபகரில் ஒருவர். முன்னைய ஒன்றியத்தின் நிர்வாகசபை உறுப்பினராவர்.



Næsteformand: Thorbjørn Lorentzen - tidligere formand for DTV (1988-94), formand for sammenslutningen af Tamilsk-Danske Foreninger (1991).

உபதலைவர்: தோபியான் லோறன்ஸ்ஸன்– டெ.த.தோ.ஒ.இன் முன்னைய தலைவர் (1988–94). டெ.த.தோ.ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பின் தலைவர் (1991தொடக்கம்)



Sekretær: T.Selvakumar- medstifter af DTV, tidligere sekretær for denne forening, medlem af forretnings udvalgene for hhv. Indsam(fra1987) og Sammenslutningen af Tamilsk - Danske Foreninger, medlem af indvandrerrådet(fra1987).

செயலாளர்: து.செல்வக்குமார் –டெ.த.தோ.ஒ.இன் ஸ்தாபகரில் ஒருவர். இதன் முன்னைய செயலாளர். டெ.த.தோ.ஒ.ஒருங்கிணைப்பின் தலைவர். சிறுபான்மை இனத்தவரின் ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பின் நிர்வாக உறுப்பினர். குடியேறியோர் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் (1987 ல் இருந்து).



Dansk Sekretær: Troels Johansen- medstifter af DTV, tidligere medlem af dennes bestyrelse og ansvarshavende redaktør for bladet Sangamam. (Socialudvalgsformand i Herning Kommune)

டெனிஸ் செயலாளர்: ரோல்ஸ் ஜோகன்ஸன்– டெ.த.தோ.ஒ.இன் ஸ்தாபகரில் ஒருவர். இதன் முன்னைய நிர்வாகசபை உறுப்பினரும் சங்கமம் இதழின் முன்னைய நிர்வாக ஆசிரியரும். கேர்னிங் நகரசபையின் சமூக சேவை தெரிவுக்குழுவின் தலைவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





Kasserer:Gitte Helbo-nyt medlem.
பொருளாளர்: கீற்ற கெல்போ– புதிய உறுப்பினர்



Medlem: R.Thanapalan- medlem af DTV 1986-94.
நிர்வாக உறுப்பினர்: ஆர்.தனபாலன்– டெ.த.தோ.ஒ.இன் முன்னைய ஒன்றிய ஸ்தாபக உறுப்பினர் (1986–94).



Medlem: David George- tidligere medlem af DTV's bestyrelse og ansvarlig for udsendelser i lokal radio 2 gange månedlig.
நிர்வாக உறுப்பினர்: டேவிட் ஜோர்ஜ்– டெ.த.தோ.ஒ.இன் முன்னைய நிர்வாக உறுப்பினர் டெனிஸ்–தமிழ் வானொலி ஒலிபரப்பின் பொறுப்பாளர்.



Medlem: M.Veethividangan- tidligere medlem af DTV's bestyrelse.
நிர்வாக உறுப்பினர்: எம் வீதிவிடங்கன்– டெ.த.தோ.ஒ.இன் முன்னைய நிர்வாக உறுப்பினர்.



Medlem: J.Douglas- medlem af DTV 1986-94, tidligere teknisk ansvarlig for bladet Sangamam.
நிர்வாக உறுப்பினர்: யே. டக்ளஸ்– டெ.த.தோ.ஒ.இன் முன்னைய உறுப்பினர் (1986–94). சங்கமம் இதழின் முன்னைய வடிவமைப்புப் பொறுப்பாளர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## SUPPLENTER:(பதில்நிர்வாகசபையினர்கள்)



Britta Svendsgård-tidligere dansk sekretær i DTV.
பிறிற்றா சுவன்ஸ்கோர்ட் - டெ.த.தோ.ஒ.இன் முன்னைய டெனிஸ் செயலாளர்.



Bodil Pedersen - tidligere kasserer i DTV.
போடில் பீற்றர்ஸன் - டெ.த.தோ.ஒ.இன் முன்னைய பொருளாளர்.



M.Shan - medlem af DTV 1986-94
எம். சண் - டெ.த.தோ.ஒ.இன் முன்னைய உறுப்பினர்.



A.Pathmanathan - medstifter af DTV og medlem 1986-94.
ஆ. பத்மநாதன் - டெ. த. தோ. ஒ. இன் ஸ்தாபகரும் உறுப்பினரும் (1986-94).

## REVISIOR: (கணக்குப்பரிசோதகர்)



Søren Bjørne - tidligere kasserer i DTV. முன்னைய பொருளாளர்

Medlem: David George- tidligere medlem af DTV's bestyrelse og ansvarlig for udsendelser i lokal radio 2 gange månedlig.
நிர்வாக உறுப்பினர்: டேவிட் ஜோர்ஜ்- டெ.த.தோ.ஒ.இன் முன்னைய நிர்வாக உறுப்பினர் டெனிஸ்-தமிழ் வானொலி ஒலிபரப்பின் பொறுப்பாளர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பா வாழ் தமிழரைப் பின்னிப்பிணைக்கும்

# தமிழ் ஓலைகள் '95

**ஐரோப்பா** முழுவதற்கும் **தனித்துவதமான** ஒரு தகவல் நூல். தமிழர் மத்தியில் உள்ள நிறுவனங்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட **ஒரே ஒரு** விபரக் கொத்து. பிரித்தானியாவிற்கென்று **முதலாவது** தகவல் நூலை அளித்த பிரித்தானியத் தமிழ் தகவல் ஏடுகள் ஆற்றவிருக்கும் **மற்றுமொரு** சாதனை. இவ்வமைப்பு பிரித்தானியாவில் உள்ள பல அரச, தனியார் முயற்சிகளினதும் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. இதற்குச் சான்றாக அமையும் நூலே **தமிழ் ஓலைகள் '94**. இலங்கை, இந்தியா, ஐரோப்பா போன்ற நாடுகளில் உள்ள தமிழ் செய்தித்தாள்களிலும், வானொலிகளிலும் இடம்பெற்றுள்ளது. பிரித்தானியாவிலுள்ள இன்டிபென்ரன்ற், ஃபினான்ஷல் ரைம்ஸ் எனும் தலைசிறந்த ஆங்கிலப் பத்திரிக்கைகளினாலும் வட்டார ரீதியிலான சில பத்திரிக்கைகளினாலும் புகழப்பட்டது. தமிழ் ஓலைகள் '94: £1.99 மட்டுமே.

இத்தகைய நூலாகத் **தமிழ் ஓலைகள் '95** வெளிவந்து ஐரோப்பா எங்கும் **இலவசமாக** விநியோகிக்கப்பட உள்ளது. இந் நூலில் **இலவசமாக** இடம்பெற்று உங்களது அமைப்புகளையும், கலை, இலக்கிய முயற்சிகளையும் வெளிக்கொணருங்கள். கீழ்க்கண்ட படிவத்தை நிரப்பி **அனுப்புங்கள்**. சந்தர்ப்பத்தை நழுவ விட்டுப் பின் வருந்தாதீர்கள்.

**மிகப் பெரிய** சுற்றுவழங்கலுடன் இலவசமாக ஐரோப்பா முழுவதற்கும் விநியோகிக்கப்பட உள்ள நூலில் விளம்பரஞ் செய்து எண்ணற்ற பாவனையாளர்களை அணுகுங்கள்.

BRITISH
tamil
DIRECTORIES

**Telefax: 081-471 2348. Tel: 081-543 2126**

Name

Address

Telephone No(s) Fax

Type of activities

Brief description of activities

Contact Name

I authorise the British Tamil Directories to use any parts of the information provided in this form for future editions of Tamil Pages

Signature Date

Please address your applications for free listing and advertising enquiries to
Tamil Pages '95, British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF, UK

www.tamilarangam.net

**Tamilsk - Dansk Venskabsforening**
**தமிழ் – டெனிஸ் தோழமை ஒன்றியம்**
**Tamil - Danish Friendship Assosiation**

Porsvænget 7, 2 sal • 7400 Herning • Danmark • Tel. & Fax 97 12 55 93 • Giro no. 695-0892